டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 30.11.2024 சனிக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 136 - Madurai | Online Edition

# சென்னைக்கு இன்று ரெட் அலர்ட்!

சென்னை, நவ.29

சென்னை உள்ளிட்ட 7 மாவட்டங்களில் இன்று அதி கன மழைக்கு வாய்ப்புள்ளதால் ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு வங்கக்கடலில் பெங்கல் புயல் உருவானதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக் கடலில் உருவான ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் புயலாக வலுப்பெற்றது. புயலாக வலுப்பெற்றதால் மேற்கு-வட மேற்கு திசையில் தமிழக கடலோர பகுதிகளை நோக்கி நகர கூடும் என வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.



இன்று பிற்பகல் மாமல்லபுரம் - காரைக்கால் இடையே பெங்கல் புயல் கரையை கடக்கும். புயல் கரையை கடக்கும் போது அதிகபட்சமாக மணிக்கு 90 கி.மீ வேகத்தில் காற்று வீசப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூரில் இன்று (நவ.30) அதி கனமழைக்கான ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், புயல் கரையை கடக்கும் போது காற்று மணிக்கு 70 முதல் 80 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என தென்மண்டல வானிலை ஆய்வு மைய இயக்குநர் பாலச்சந்திரன் தெரிவித்து உள்ளார்.




சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய தென்மண்டல வானிலை ஆய்வு மைய இயக்குநர் பாலச்சந்திரன், தென்மேற்கு வங்கக் கடலில் நிலவி வந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக மாறியது. வடமேற்கு திசையில் நகர்ந்து நாளை காரைக்கால் - மாமல்லபுரம் இடையே கரையை கடக்கும். இதன் காரணமாக மணிக்கு 70 -90 கிமீ வேகத்தில் காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம். அடுத்து வரும் 3 நாட்களுக்கு தமிழகம், புதுச்சேரியில் பரவலாக மழை பெய்யக்கூடும்.

காற்றின் வேகம், காற்று குவிதலில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக, முன்னறிவிப்பில் குழப்பம் ஏற்பட்டது. அண்மையில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலங்களில் இது மாறுபட்டது.

ஒவ்வொரு கணிப்பின் போதும் காற்றழுத்த தாழ்வு மண்டலத்தில் மாற்றம் காணப்பட்டது. ஒரே நேரத்தில் பலத்த மழை பெய்யுமா, அல்லது பரவலாக மழை பெய்யுமா என்பதை கணிக்க முடியாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# பட்டியல் இன விவசாயிகளுக்கு நிலக்கடலை சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி

விழுப்புரம், நவ.29

நேற்று 29.11.24 வெள்ளிக்கிழமை அன்று தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், மண்டல ஆராய்ச்சி நிலையம், விருத்தாச்சலம், அகில இந்திய நிலக்கடலை ஆராய்ச்சி நிலையம் மற்றும் TNIAMP அம்மை அப்பர் உழவர் உற்பத்தி யாளர் நிறுவனம் லிட்., போளூர், திருவண்ணாமலை மாவட்டம் இணைந்து பட்டியல் இன விவசாயிகளுக்கு நிலக்கடலை சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு அம்மை அப்பர் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் தலைவர் கே.வி.ராஜ்குமார் தலைமை வகித்தார்.




விருதாச்சலம், மண்டல ஆராய்ச்சி நிலைய இணை பேராசிரியர் முனைவர் ஹரிசுதன் முன்னிலையில், விருதாச்சலம் மண்டல ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் பாஸ்கரன், சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு நிலக்கடலை பயிர் சாகுபடி தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு விரிவாக விளக்கினார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைத்து விவசாயிகளுக்கும் 60 கிலோ நிலக்கடலை விதை வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாம்பட்டு விவேகானந்தா அறக்கட்டளை தலைவர் அக்ரி முனைவர் பாலு ஏற்பாடு செய்திருந்தார்.

அம்மை அப்பர் உழவர் உற்பத்தியாளர் நிறுவன இயக்குனர்கள் மு.மனோகரன், ஜெ.தணிகைமலை, ஜி.பெருமாள், சி.ஜெய்சங்கர், சக்தி ஆகியோர் கலந்து கொண்டனர். ம.லோகநாதன் நன்றி கூறினார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# பருவநிலை மாற்றத்தால் திராட்சை பழ கொள்முதல் கடும் சரிவு

## விவசாயிகள் கவலை

தேனி, நவ.29

தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில், திராட்சை பழங்களை பருவநிலை மாற்றம் காரணமாக கொள்முதல் செய்வதற்கு வியாபாரிகள் தயக்கம் காட்டுவதால் விலை சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் மிகவும் கவலை அடைந்து வருகின்றனர்.

**தலைக்கவசம் உயிர்க்கவசம்**



# வேளாண் விளைபொருட்கள் தரம் பிரிப்பு – பகுப்பாய்வு பயிற்சி

திண்டுக்கல், நவ.29

வேளாண் விளைபொருட்கள் தரம் பிரிப்பு – பகுப்பாய்வு பயிற்சியானது, திண்டுக்கல் மாவட்ட வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் வேளாண் விளைபொருட்களை தரம் பிரித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் தொடர்பான ஒரு நாள் பயிற்சி அட்மா திட்ட நிதி உதவியுடன் திண்டுக்கல் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் மின்னணு கற்றல் மையத்தில் நடைபெற்றது. பயிற்சியை வேளாண் துணை இயக்குனர் (வேளாண் வணிகம்) நிர்மலா துவங்கி வைத்தார்.



மதுரை மண்டல விற்பனை அலுவலர் வேணுகோபால், தோட்டக்கலை உதவி இயக்குனர் னைி. திண்டுக்கல் மாநில அக்மார்க் வேளாண் அலுவலர் பராசக்தி, வேளாண் அலுவலர் (வேளாண் வணிகம்) கிருஷ்ணகுமார், வேளாண் அலுவலர் (உழவர் சந்தை) பூர்ணிமா, திண்டுக்கல் விற்பனை குழு மேலாளர் மஹாலக்ஷ்மி வேளாண் விளைபொருட்கள் அக்மார்க் செயல்பாடுகள், தரச்சான்று குறித்து விரிவாக எடுத்து கூறினர்.

பயிற்சியில் திண்டுக்கல் மாவட்டத்தில் அக்மார்க் தரச்சான்று பெற்ற பொருட்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு இருந்தன. அக்மார்க், வேளாண் வணிக திட்டங்கள் மற்றும் விற்பனை குழு செயல்பாடுகள் குறித்த துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டன. பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் — 29.11.2024

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 25 | 30 | 56 | காளான் (சிப்பிபட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 28 | 32 | 57 | உருளை (பிற) | 30 | 38 |
| 1B | கத்திரி(Nadu) | 40 | 46 | 57A | உருளை(ஊட்டி) | 32 | 58 |
| 2 | வெண்டை | 50 | 54 | 58 | மேரக்காய் | 25 | 28 |
| 3 | தக்காளி (நாடு) | 30 | 35 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 35 | 40 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 30 | 34 | 60 | கேரட் | 70 | 74 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 65 | 70 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 68 | 72 |
| 6 | புடலை | 25 | 30 | 62 | நூல்கோல் | 45 | 48 |
| 7 | பீர்க்கன் | 40 | 46 | 63 | டர்னிப் | 45 | 48 |
| 8 | சுரைக்காய் | 30 | 34 | 64 | மு.கோஸ் | 25 | 30 |
| 9 | பாகற்காய் | 30 | 38 | 65 | மு.கோஸ்(கலர்) | 25 | 30 |
| 10 | கொத்தவரை | 40 | 46 | 66 | காளிபிளவர் | 40 | 43 |
| 11 | பூசணி | 12 | 14 | 67 | பட்டாணி | 100 | 120 |
| 12 | அரசாணி | 15 | 20 | 68 | பூண்டு | 260 | 332 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 25 | 30 | 69 | இஞ்சி | 48 | 100 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 22 | 25 | 70 | புருக்கோலின் | 170 | 180 |
| 15 | சி.வெங்காயம் | 46 | 50 | 71 | பென்னி பீன்ஸ் | 55 | 60 |
| 16 | பெ.வெங்காயம் | 58 | 68 | 72 | குடமிளகாய் | 42 | 46 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 35 | 38 | 73 | ஊட்டி அவரை | 150 | 160 |
| 18 | பச்சை மொச்சை | 50 | 60 | 74 | பஜ்ஜி மிளகாய் | 0 | 0 |
| 19 | முருங்கை | 0 | 0 | 71A | | | |
| 20 | தேங்காய் | 54 | 58 | | | | |
| 21 | மாங்காய் | 45 | 48 | | | | |
| 22 | வாழைக்காய் | 28 | 32 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 42 | 46 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 65 | 70 | 75 | எலுமிச்சை | 50 | 60 |
| 25 | சேப்பங்கிழங்கு | 45 | 50 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 60 |
| 26 | மரவள்ளி | 25 | 30 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 38 | 42 | 78 | பப்பாளி | 22 | 26 |
| 28 | கறிவேப்பிலை | 40 | 46 | 79 | மாதுளை | 120 | 200 |
| 29 | கொத்தமல்லி | 50 | 58 | 80 | திராட்சை | 50 | 60 |
| 30 | புதினா | 8 | 9 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 20 | 22 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 200 |
| 32 | தண்டுக்கீரை | 20 | 22 | 83 | ஆரஞ்ச் | 40 | 65 |
| 33 | சுக்கிட்டி | 20 | 25 | 84 | சாத்துக்குடி | 70 | 80 |
| 34 | அரைக்கீரை | 20 | 22 | 85 | அன்னாசி பழம் | 50 | 55 |
| 35 | சிறுகீரை | 20 | 22 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு &வெந்தயம் | 20 | 25 | 87 | முலாம்பழம் | 45 | 50 |
| 37 | பருப்புக்கீரை | 20 | 22 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 10 | 12 | 89 | | | |
| 39 | வல்லாரை | 10 | 12 | 90 | கதளி | 45 | 50 |
| 40 | கோவக்காய் | 40 | 46 | 91 | பூவன் | 35 | 40 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 45 | 50 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 35 | 40 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 30 | 35 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 25 | 28 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 20 | 26 | 96 | நேந்திரன் | 45 | 50 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 35 | 40 | 97 | செவ்வாழை | 65 | 70 |
| 47 | சுண்டக்காய் | 150 | 160 | 98 | பேரிக்காய் | 150 | 165 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 45 | 48 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 40 | 44 |
| 50 | நிலக்கடலை | 55 | 60 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 65 | 75 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 40 | 44 | | | | |
| 55A | துவரை | 55 | 60 | | | | |

# ஆணை கொம்பன் ஈ தாக்குதலுக்கு மணமேல்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஆலோசனை

புதுக்கோட்டை, நவ.29

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி வட்டாரத்தில் தற்போது 10460 ஹெக்டரில் சம்பா நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது நிலவும் தட்ப வெட்ப நிலை மாற்றம் காரணமாக நெற்பயிரில் ஆணை கொம்பன் ஈ தாக்குதல் பரவலாக காணப்படுகிறது. அதை கட்டுப்படுத்த வேண்டியது அவசிய மாகும். ஆணை கொம்பன் ஈ ஆனது மஞ்சள் கலந்த பழுப்பு அல்லது இளஞ்சிவப்பு நிறமாகவும் கொசுவை போல் சிறிய தாகவும் நீண்ட கால்களுடன் காணப்படும். நெல் நடவு செய்து 35 முதல் 45 நாட்களில் இந்த பூச்சி தாக்குதல் அதிகம் காணப்படும்.




இந்த ஈ வளர்கின்ற தூர்களில் உட்பகுதிக்கு சென்று வளர்கின்ற பாகத்தை உணவாக உட்கொள்ளும். தாக்கப்பட்ட தூர்கள் வெண்மையாகி இலைகள் வளராமல் வெங்காய இலை போல் குழல் மாதிரி மாறிவிடும். பாதிக்கப்பட்ட தூர்கள் யானை தந்தம் போன்று இருப்பதால் இதற்கு ஆணை கொம்பன் என்று பெயர். தாக்கப்பட்ட தூறில் இருந்து கதிர்கள் வெளியே வராமல் விவசாயிகளுக்கு மகசூல் இழப்பு ஏற்படும். இதனை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு கார்போ சல்பான் 25% E.C 400 மில்லி அல்லது தையா மீதாக்சோம் 25% WG 100 கிராம் அல்லது பிப்ரோனில் 5% SC 250 மில்லி இடலாம்.

மேலும் அறுவடைக்கு பின்னர் வயலை நன்கு உழவு செய்வதன் மூலமாக தழைச்சத்தை அதிகம் இடாமலும் பயிரினை ஈ தாக்குதலில் இருந்து பாதுகாக்கலாம் என்று மணமேல்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சு.ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# சொட்டு நீர்ப்பாசனம் பராமரித்தல்

நீர் ஆதாரங்கள் குறைந்து வரும் சூழலில் பயிர் சாகுபடிக்கு சொட்டு நீர்ப்பாசனம் போன்ற நுண்ணீர்ப்பாசன முறையில் பயிருக்குத் தேவையான சரியான அளவு நீரை நேரடியாக பயிரின் வேர்ப்பகுதியில் அளிக்கலாம். இம்முறையில் பாசன நீரை சேமிப்பதுடன் நீர் உபயோகத்திறனையும் அதிகரிக்கலாம். எனவே, அச்சொட்டு நீர் பாசன முறையை நன்கு பராமரித்தல் அவசியம்.

**தினமும் செய்ய வேண்டியவை**

1. சல்லடை தட்டு வடிகட்டியைச் சுத்தம் செய்தல் வேண்டும்.

2. தண்ணீரை ஓட விட்டு வடிகட்டியின் அடியிலுள்ள வால்வைத் திறந்து நீரை வெளியேற்றிவிடுவதன் மூலம் சல்லடை / தட்டினைச் சுற்றியுள்ள தூசிகளை வெளியேற்ற முடியும். மணல் வடிகட்டியில் நீரைப் பின் நோக்கி ஓட விட்டு மணல் வடிகட்டப்பட்ட தூசிகளை அகற்ற வேண்டும்.

3. எல்லா கேட்வால்வுகளும் திறந்திருக்கின்றனவா? அல்லது மூடியிருக்கின்றனவா என்று சோதனை செய்தபின் நீர்ப்பாய்ச்ச வேண்டிய கிளைக் குழாய் வால்வினை மட்டும் திறந்து வைக்க வேண்டும்.

4. எல்லா கிளைக் குழாய் வால்வினை மட்டும் திறந்து வைக்க வேண்டும். எல்லா கிளைக் குழாய் வால்வுகளும் மூடிய நிலையில் நீரைப் பாய்ச்சினால் ஏற்படும் அழுத்தம் வலுவில்லாத இணைப்பை உடைத்து நீர் வெளியேற முயலும்.

**வாரந்தோறும் செய்யவேணடியவை**

1. வயல் முழுவதும் உள்ள உமிழிகளை/ சொட்டிகளை சோதனையிட்டு, கசிவு இருக்கின்ற உமிழிகள், இணைப்புக்கள், அடைப்பட்ட உமிழிகள் ஆகியவற்றைக் கண்டறிந்து சரி செய்ய வேண்டும்.

2. ஓரிடத்தில் அதிகமாக நனைவதும், மற்ற இடத்தில் வறண்டும் காணப்பட்டால் கவனித்து சரி செய்ய வேண்டும்.

3. பக்கக் கருங்குழாய்கள் நேராக இல்லாமல் வளைந்தும், நெளிந்தும் கிடந்தால் நுனியைப் பிடித்து லேசாக இழுத்து நேராக இருக்கும் படி செய்ய வேண்டும்.

4. உமிழியின் வாயில் உப்புப்படிந்து வெண்மையாகத் தெரிய ஆரம்பித்தால் அமிலம் விட்டு சுத்தம் செய்ய வேண்டும்.

5. மோட்டரின் ப்யூஸ், சுவிட்ஸ்போர்டு ஆகியவற்றை கவனித்து பல்லி, குளவி, குருவி ஆகியன கூடுகள் கட்டாமல் சுத்தம் செய்ய வேண்டும்.

6. கிளைக் குழாயின் கடைசியில் உள்ள மூடியைத் திறந்து நீரைச் செலுத்தி கிளைக் குழாய்களை சுத்தம் செய்ய வேண்டும்.




7. பக்கக் கருங்குழாயின் நுனியிலுள்ள வளையத்தை கழற்றி, குழாயைத் திறந்துவிட்டு நீரைப் பாய்ச்சி சுத்தம் செய்ய வேண்டும்.

8. அனைத்து கிளைக் குழாய்களிலும் பொருத்தப்பட்டுள்ள வால்வுகள், கைப்பிடிகள் ஆகியன சரியாக இயங்குகின்றனவா அல்லது கசிவு ஏற்படுகிறதா என்பதனைக் கவனிக்கவேண்டும்.

**மாதம் ஒரு முறை செய்ய வேண்டியன**

1. டப்பாக்களை வயலில் 10-20 இடங்களில் வைத்து அமைப்பை இயக்கி எல்லா உமிழியிலும் ஒரே அளவு நீர் வெளிவருகிறதா என்பதனை அவசியம் பரிசோதிக்க வேண்டும்.

2. பயிருக்கான உர அட்டவணைப்படி கரையும் உரம் செலுத்தப்படுகின்றதா? பயிரின் பருவத்திற்கேற்ப கரையும் உரங்களின் விகிதம் மாற்றப்படுகின்றதா என்று கவனிக்க வேண்டும்.




3. பிரசர் கருவி சரியாக இயங்குகிறதா என அதை திருகி வெளியே எடுத்து நீர் உட்புகும் துளையில் அடைப்பு ஏற்பட்டிருக்கிறதா என கவனித்து சரி செய்ய வேண்டும்.

**ஒரு பயிரின் அறுவடைக்குப் பின் செய்ய வேண்டியவை**

1. அமிலம் செலுத்தி பிரதான குழாய், கிளைக் குழாய் மற்றும் பக்கவாட்டுக் கருங்குழாய்களையும், உமிழிகளையும் சுத்தம் செய்துவிட வேண்டும்.

2. இரப்பர் வாசர் உள்ள இடங்களில் எல்லாம் மாற்றி புதிய இரப்பர் வாசர் போடவேண்டும் என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி, வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி கேட்டுக் கொண்டுள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**



Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
CML-6400119610
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# பருவநிலை மாற்றத்தை கையாளுவதில் இந்தியா எந்த இடத்தில் உள்ளது தெரியுமா?

கடந்த சில காலமாக நம்முடைய நாட்டில் கடுமையான வெப்பமும், வறட்சியும் அதிகப்படியான மழை பொழிவும் ஒரு சீரற்ற நிலையில் உள்ளது. இது பருவநிலை மாற்றத்தால் உருவாகி உள்ளதாகவும் அதனை எதிர்த்து போராடுவதற்கான முயற்சியில் உலக நாடுகள் போராடி வருகின்றன என்பது நாம் அறிந்தே. அந்த வகையில் சமீபத்தில் அஜர்பைஜானின் பாகு மாநாட்டில், பருவ நிலை செயல்பாட்டை கையாண்டு 60க்கு மேற்பட்ட நாடுகளின் தரவரிசை பட்டியலில் நம்முடைய இந்தியா 10வது இடத்தில் உள்ளது.

**எதனடிப்படையில் இந்த தர குறியீடு நிர்ணயிக்கப்படுகிறது?**

கரியமில வாயு உமிழ்வுகள் புதுப்பிக்கத்தக்க மற்றும் பருவ நிலை கொள்கையின் அடிப்படையில் நாடுகளின் செயல்பாடு களை ஆராய்ந்து ஆய்வுகளின் அடிப்படையில் இத்தரக் குறியீடு நிர்ணயிக்கப்படுகிறது. அவ்வகையில் எந்த ஒரு நாடும் முழுமையான குறியீட்டை அடையாததால் முதல் மூன்று இடங் கள் காலியாக வைக்கப்பட்டுள்ளது. நான்காவதாக நெதர் லாந்து அடுத்த படியாக பிரிட்டனும் உள்ளது. கடைசி தர வரிசை பட்டியலில் அரபு நாடுகள் உள்ளன. (அவையாகும் எரி பொருள் உற்பத்தி செய்யும் நாடுகள்) என்பது குறிப்பிடத்தக்கது.

**இந்தியாவின் நிலைப்பாடு**

உலகின் அதிக மக்கள்தொகை கொண்ட நாடாக இந்தியா இருந்தாலும்கூட இங்கு தனிநபர் உமிழ்வு (EMMISION) மற்றும் எரிசக்தியின் பயன்பாடு ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி (SOLAR) பயன்பாடு வேகமாக விரிவடைந்து வருகிறது. உலக அரங்கில் பசுமை ஆற்றலில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கின்றன என்பது மிகையல்ல. இந்தியாவின் தனிநபர் கரிய மில உமிழ்வு 2.9 டன்னாக உள்ளது. இது உலக சாரசரியான 6.6 டன்னை விட மிகக்குறைவு. அதுமட்டுமல்ல, உலகின் 3வது பெரிய பசுமை இல்ல வாயு உமிழ்வு நாடாகவும், வேகமாக வளர்ந்து வரும் பெரிய பொருளாதாரம் கொண்ட நாடாகவும் உள்ளது.

### இந்தியாவின் எதிர்கால இலக்கு?

1) வரும் 2070ஆம் ஆண்டுக்குள் நிகர பூஜ்ஜிய உமிழ்வை அடைய இந்திய உறுதி பூண்டுள்ளது.

2) வரும் 2030க்குள் ஆண்டுக்கு 500 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முழுமையாக அடைவதையும் இந்தியா இலக்காக கொண்டுள்ளது.

### பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் விளைவுகள்

திடீரென ஏற்படும் அதிக மழை பொழிவு, நிலச்சரிவு, மேக வெடிப்பு, அதிகமான வெப்ப நிலை, கடுமையான வறட்சி போன்ற இயற்கை இடர்பாடுகள். இதனை சரியான முறையில் தீர்வுகாண வேண்டும்.

### இதற்கும் விவசாயத்திற்கு சம்மந்தம் உண்டா?

பருவம் தப்பிய மழையால் பயிர்கள் சேதம், கடுமையான வெயிலால் மணிகள் பயிரில் பிடிக்காத நிலை, நிச்சயமற்ற சாகுபடி முறைகள் மாற்றம், மகசூல் பாதிப்பால் விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிப்பு போன்றவை நிகழும்.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.



# விதைகளை பூச்சிகளிடமிருந்து பாதுகாக்க கடைப்பிடிக்க வேண்டிய பொதுவான வழிமுறைகள்

வயலிலேயே விதைகளைத் தாக்கும் பூச்சிகளான பயறு வண்டு, நெல் அந்து மற்றும் அரிசிக் கூண் வண்டு போன்றப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த பால் பிடிக்கும் சமயத்தில் மாலத்தியான் 50 ஈசி பூச்சிக் கொல்லியை 0.5 சதம் என்ற அளவில் தெளிக்கலாம். (லிட்டருக்கு ஒரு மில்லி).விதைகளை சேமிக்கும் கலன்கள் மற்றும் அறைகளை நன்றாக சுத்தம் செய்து எந்தவித பூச்சிகள் மற்றும் அதன் கூடுகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அறுவடைக்குப் பின் விதைகளை நன்றாக உலர்த்தி, ஈரப்பதம் 8-10 அளவிற்கு குறைக்க வேண்டும்.

நவீன சேமிப்புக் களஞ்சியங்களை உபயோகித்தல், குறிப்பாக உலோக கலன்கள் சிறு விவசாயிகளுக்கு தானியங்களை சேமித்து வைத்துக்கொள்ள சிறந்த சாதனமாக விளங்குகிறது. தானிய மூட்டைகளை தரையில் வைக்காமல் கட்டைகள் மற்றும் மூங்கில் பாய்களின் மீது அடுக்க வேண்டும். தானிய சேமிப்புக்குப் பயன்படுத்தப்படும் சாக்குப்பைகள் புதியதாக அல்லது பூச்சியற்றதாக இருக்க வேண்டும். பழைய சாக்குப்பைகளை மாலத்தியான் அல்லது டைகுளொர்வாஸ் 0.1 சதக்கரைசலில் நனைத்து உலர்த்தியப்பின் உபயோகிக்கலாம்.

மூட்டைகளைச் சுவற்றை ஒட்டி அடுக்காமல் தனித்தனியாக அடுக்கடுக்காக நல்ல இடைவெளி விட்டு காற்றோட்டமாக வைக்க வேண்டும். மூட்டைகளின் மீது மாலத்தியான் 0.1 சதக்கரைசலை மூட்டை நனையாமல், தானியங்கள் மேல் படாமல் அளவாக தெளித்து வரலாம்.

பயறு வகைகளான துவரை, உளுந்து, பாசிப்பயறு முதலியவற்றை வேப்பம் மற்றும் உணவு எண்ணெய்களுடன் கலக்கி வைப்பதன் மூலம் (1:100 எடை என்ற விகித்தில்) பயறு வண்டு தாக்குவதைக் கட்டுப்படுத்தலாம். இதைத் தவிர வேப்பங் கொட்டை தூளை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் உபயோகித்து பயன் பெறலாம்.

விதை சேமிப்பின் போது ஏற்படும் பூச்சிகளை அவற்றின் வாழ்க்கை நடைமுறையை பயன்படுத்தி அகற்ற தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சாதனங்களான குழாய் வடிவப்பொறி, கூம்பு வடிவபொறி, வயறு வண்டுகளைப் பிடித் தழிக்கும் பொறி, பூச்சிகளை தானாகவே அகற்றும் சேமிப்புக் கலன், பூச்சிகளின் முட்டைகளை அழிக்கும் உபகரணம், ஊதாக்கதிர் விளக்குப் பொறிகளைப் பயன்படுத்தலாம் என திருநெல்வேலி விதைப்பரிசோதனை வேளாண்மை அலுவலர் ஜெ.பி.சஜிதா கேட்டுக் கொண்டார்.




# மக்காச்சோளத்தில் அதிக மகசூல் பெற தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மக்காச்சோள மேக்சிம்

## சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் தகவல்

திருச்சி, நவ.29

உலகளவில் அதிகம் பயிரிடப்படும் தானியப் பயிர்களில் ஒன்றாக மக்காச்சோளம் கருதப்படுகிறது. இது 'தானியப் பயிர்களின் அரசி' என அழைக்கப்படுகிறது. மக்காச்சோளம் உணவுப் பொருளாக மட்டுமல்லாமல் கால்நடைகளுக்கு தீவனப் பயிராகவும் சாகுபடி செய்யப்படுகிறது. திருச்சி மாவட்டத்தின் 14 வட்டாரங்களிலும் தற்போது பரவலாக மக்காச்சோளம் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

மக்காச்சோளத்தில் அதிக மகசூல் பெற கீழ்க்கண்ட பயிர் மேலாண்மை உத்திகளை கடைபிடிக்குமாறு சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் வலியுறுத்துகிறது.




### உரமிடுதல்

- மண்பரிசோதனைக்கு ஏற்ப தழை, மணி, சாம்பல் சத்துக்களை இடவேண்டும். இல்லையெனில் பொதுப் பரிந்துரையான 135, 62.50, 50 கிலோ/எக்டர் என்றளவில் இரங்களுக்கும், 250, 75, 75 கிலோ/எக்டர் என்ற அளவில் வீரிய ஒட்டு இரங்களுக்கும் தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்களைப் பொதுவாக அளிக்க வேண்டும்.

- அடியுரமாக கால் பகுதி தழைச்சத்து, முழு அளவு மணிச் சத்து மற்றும் சாம்பல்சத்து விதைப்பதற்கு முன் இடவும்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

- பாதி அளவு தழைச்சத்தை விதைத்த 25ம் நாளிலும், மீத முள்ள கால் பங்கு தழைச்சத்தை விதைத்த 45ம் நாளிலும் இடவேண்டும்.

- உரக்கலவையை பார்களின் ஓரத்தில் இடவேண்டும். 4 செ.மீ ஆழத்திற்கு மண்ணால் மூட வேண்டும்.

- அசோஸ்பைரில்லம் நுண்ணுயிர் உரத்தைப் பயன் படுத்தினால் 100 கிலோ தழைச்சத்து மட்டும் அளித்தால் போதும்.

**மக்காச்சோள மேக்சிம்**

மக்காச்சோள மகசூலை மேம்படுத்த தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் பயிர் வினையியல் துறையின் மூலம் இலை வழி ஊட்டச்சத்தாக மக்காச்சோள மேக்சிம் என்னும் பயிர் ஊக்கி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது மக்காச்சோளத்துக்கு தேவையான பேரூட்டச் சத்துகள், நுண்ணூட்டச் சத்துகள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் கலந்த பூஸ்டர் ஆகும். இந்த பூஸ்டரை ஆண் மஞ்சரி உருவாகும் பருவம் மற்றும் மணி உருவாகும் பருவத்தில் தலா 3 கிலோ வீதம் 200 லிட்டர் தெளிப்பு திரவம் கலந்து தெளிக்க வேண்டும். ஏக்கருக்கு 6 கிலோ மக்காச்சோள மேக்சிம் பயன்படுத்த வேண்டும்.




மக்காச்சோள மேக்சிம் பயன்படுத்துவதால் பயிர்களில் மணி பிடிக்கும் திறன் அதிகரிக்கும். இந்த பூஸ்டர் பயன்படுத்துவதால் மக்காச்சோளத்தில் வறட்சியைத் தாங்கும் தன்மை அதிகரிப்ப தோடு விளைச்சல் கூடுதலாக 20 சதம் வரை கிடைக்கப் பெறுகிறது.

டி.என்.ஏ.யு மக்காச்சோள மேக்சிம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகள், ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் வேளாண் அறிவியல் நிலையங்களில் மட்டுமே கிடைக்கும். எனவே விவசாயிகள் மேற்கண்ட இடங்களில் வாங்கி பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. அல்லது பின்வரும் முகவரியில் பார்சல் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண் அறிவியல் நிலையம், சிறுகமணி, திருச்சி மாவட்டம். தொலைபேசி எண் : 0431 2962854 , 91717 17832. மேலும் விவரங்களுக்கு மேற்கண்ட தொலைபேசி எண்ணை அலுவலக நேரத்தில் (காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை) தொடர்பு கொள்ளவும்.

மேற்கண்ட தகவல்களை சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜாபாபு தெரிவித்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



# திருந்திய நெல் சாகுபடியில் களையெடுப்பு மற்றும் உரமிடுதல்

திருந்திய நெல் சாகுபடியில் களையெடுப்பு மற்றும் உரமிடுதலை ஒரே நேரத்தில் செய்வதற்கான பண்ணைக்கருவி குறித்து சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி கூறியதாவது,

திருந்திய நெல் சாகுபடியில் களையெடுப்பு மற்றும் உரமிடுதலை ஒரே நேரத்தில் செய்வதற்கான பண்ணைக்கருவி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் 2024-ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**சிறப்பியல்புகள்**



- ஒரே நேரத்தில் களையெடுத்தல் மற்றும் உரம் இடுதல் ஆகிய இரண்டு வேலைகளையும் செய்கிறது.
- **கருவி /இயந்திரத்தின் விலை :** ரூ.50,000/- (SRI நெல் பயிரில் களையெடுக்கும் கருவி உட்பட)
- திறன் : நாளொன்றுக்கு 1 எக்டர்
- **ஆகும் செலவு :** எக்டருக்கு ரூ.400 மட்டும்.
- **நேரம் சேமிப்பு :** 85 சதவிகிதம்
- **ஆள் செலவு சேமிப்பு :** 90 சதவிகிதம்
- **கருவி/இயந்திரத்தின் எடை :** 25 கிலோ



**இதர பயன்கள்**

SRI நெல் பயிரில் களையெடுக்கும் இயந்திரத்திலேயே உரமிடும் கருவியையும் இணைத்துக்கொள்ளலாம்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# வீட்டு காய்கறித் தோட்டம்

வீட்டுக் காய்கறித் தோட்டமானது, வீட்டின் பின்புறத்தில் சமையலறையில் வீணாகும் நீரைக் கொண்டு பழங்கள் மற்றும் காய்கறிகளை வளர்த்தல். இது வீட்டுத் தோட்டம், ஊட்டச்சத்து தோட்டம், வீட்டுக் காய்கறித் தோட்டம், காய்கறித் தோட்டம் என அழைக்கப்படுகிறது.

**வீட்டுக் காய்கறித் தோட்டத்தின் பயன்கள்**

- அதிக ஊட்டச்சத்து நிறைந்த காய்கறிகள் மற்றும் பழங்கள் கிடைக்கும்.
- நச்சு மருந்துகள் இல்லாத பழம் மற்றும் காய்கறிகளை உற்பத்தி செய்தல்.
- காய்கறிகள் வாங்குவதற்காக ஆகும் செலவைக் குறைக்க முடிகின்றது.
- வீட்டுக் காய்கறித் தோட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் காய்கறிகளானது கடைகளில் வாங்குவதைக் காட்டிலும் சுவையாக இருக்கும்.
- சமையலறையில் வீணாகும் நீர் மற்றும் பொருட்களை உபயோகமாக பயன்படுத்த முடிகின்றது.
- உடலிற்கும் மனதிற்கும் உடற்பயிற்சியாகும்.

**இடத் தேர்வு**

வீட்டின் பின்புறம் அதிக சூரிய ஒளி கிடைக்கும் வெட்ட வெளிப் பகுதி மற்றும் நீர் ஆதாரமுள்ள பகுதி, வீட்டுக் காய்கறித் தோட்டத்தின் அளவு மற்றும் வடிவமானது நிலத்தின் அளவு, வீட்டிலுள்ளவர்களின் எண்ணிக்கை மற்றும் தோட்டத்தை சீராக பராமரிக்க ஆகும் கால அளவைப் பொறுத்தது.

ஐந்து பேர் கொண்ட குடும்பத்ினருக்கு, 5 சென்ட் (200 x 2) இடமானது ஆண்டு முழுவதும் காய்கறிகள் கொடுக்க போதுமானது. செவ்வக வடிவ தோட்ட அமைவானது சதுர வடிவ (அ) நீள் பட்டை வடிவ தோட்டத்தை காட்டிலும் சிறந்ததாகும்.

**வீட்டுக் காய்கறித் தோட்டத்தின் வரைபடம்**

- வேலி – கம்பிகளான வலை (அ) அகத்தி போன்ற உயிர் வேலி அமைத்தல்

- பல்லாண்டு பயிர்களான மா, சப்போட்டா, எலுமிச்சை, நெல்லி மற்றும் முருங்கை போன்றவற்றை தோட்டத்தின் ஓரப் பகுதிகளில் நிழலில் விழாத வகையில் நட வேண்டும்.

- ஒன்று (அ) இரண்டு உரக் குழிகளை ஒரு ஓரத்தில் அமைக்க வேண்டும்.

- வேலியின் நான்கு ஓரங்களிலும், சுரை, பாகல் மற்றும் புடலை போன்ற பயிர்களை படர விட வேண்டும்.

- சில பயிர்களை நேரடியாக விதைத்தல் (அமராந்தஸ், சுரை, பாகல் மற்றும் புடலை).

- சில பயிர்களை நேரடியாக விதைத்து நடுதல் வேண்டும். (துக்காளி, கத்தரி, மிளகாய் மற்றும் வெங்காயம்).

- பயிரிடும் பரப்பை சமமாக பிரித்து, ஓராண்டு காய்கறிப் பயிர்களை பயிரிட வேண்டும்.

- தொடர்ச்சியாக மற்றும் சிறப்பான பயிரிடுதலை வீட்டுக் காய்கறித் தோட்டத்தை அமைத்தல்.

- தேவையான அளவு அங்கக உரங்களை அடிக்கடி இட்டு மண்ணின் வளத்தை பாதுகாத்தல்.

- ஒவ்வொரு பாத்திக்கும் பார்சால் பாசனம் அமைத்தல்

- பயிரிடும் பருவம் – ஜுன் – ஜுலை, செப்டம்பர் – அக்டோபர்.

- தேவையான அளவு தேன் கூடு பெட்டிகளை அமைப்பதன் மூலம் போதுமான அளவு மகரந்தச் சேர்க்கை நடைபெறுவதுடன் தேன் கிடைக்கும்.

- நல்ல பயிர் அறுவடை செய்து மகசூல் பெற வேதியியல் உரங்களை இடுதல் அவசியம்.

- நச்சு மருந்துகள் தெளிப்பதை தவிர்க்க வேண்டும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மர நெல்லி | முருங்கை | பப்பாளி | | உரக்குழி | | காக்கீனியா |
| எலுமிச்சை | மாதுளை | | | நாற்றங்கால் படுக்கைகள் | | |
| அவரை | கறிவேப்பிலை | | | | | பாகல் |
| | தவசிக் கீரை | | | மூலிகைச் செடிகள் (ஜிம்னியா, தூதுவளை, ஓமவள்ளி, துளசி) | | |
| | புதினா | அமராந்தஸ் | | | | |
| புடலை | பொன்னாங்கன்னி | | | பெருவள்ளிக்கிழங்கு | சேனக்கிழங்கு | பீர்க்கன் |
| | கொத்தமல்லி | மிளகாய் | | சிறுவள்ளிக்கிழங்கு | கொத்தவரை | |
| | வெந்தயம் | கத்தரி | | சேப்பங்கிழங்கு | காராமணி | |
| சின்ன வெங்காயம் | பெல்லாரி வெங்காயம் | தக்காளி | நுழைவு | மரவள்ளி | முள்ளங்கி | பீட்ரூட் |

**பயிரிடும் முறைகள்**
**பயிரின இடைவெளி**

| | | |
|---|---|---|
| தக்காளி, கத்தரி மற்றும் மிளகாய் | : | 60 x 60 செ.மீ |
| தட்டைபயறு | : | 60 x 45 செ.மீ |
| பாகற்காய் | : | 2 x 2 மீ |
| வெங்காயம் | : | 15 x 10 செ.மீ |
| குச்சி கிழங்கு | : | 60 x 60 செ.மீ |
| கிழங்கு | : | 60 x 60 செ.மீ |

முதன்மையாக பாத்தியில் நீர்ப்பாசனம் செய்யும் முன் நாற்று களை சரியான இடைவெளியில் நட்டு பின் மூன்றாவது நாள் உயிர் நீர் மறவாமல் அளிக்க வேண்டும். 1 – 3 விதைகள் நேரடி விதைப் பில் பின்பற்றுவதுடன் போதுமான அளவு பாசனம் செய்வதுடன் 2 நாற்றுகள் விட்டு மீதமானவற்றை பிடுங்கிவிட வேண்டும்.

**வீட்டு காய்கறித் தோட்ட மேலாண்மை**

வேலியை ஒட்டிய பகுதியில் தாவரங்களை வளர்த்து படரவிட வேண்டும். சமையலறையில் வீணாகும் குப்பைகளை உரக் குழியில் இட்டு ஈரப்பதத்தை வைத்திருக்க வேண்டும்.

**நீர்ப்பாசனம்**

தேவையான போது நீர் ஊற்ற வேண்டும்.

**உரங்கள்**

மட்கிய சமையலறை கழிவுகளை உரமாக மாற்றி எல்லா பயிருக்கும் இட வேண்டும். கலப்பு உரத்தை பயிருக்கு 5 கிராம் என்ற வீதம் நட்ட 30, 60 மற்றும் 90வது நாட்களில் இட வேண்டும்.

**களையெடுத்தல்**

தேவையான போது களையெடுக்க வேண்டும்.

**அறுவடை**

பச்சை நிறத்திலிருந்து மஞ்சள் (அ) சிவப்பு நிறமாக காய்கள் மாறும்போது அறுவடை செய்ய வேண்டும்.

**பயிர் பாதுகாப்பு**

பழங்கள் மற்றும் காய்கறிகளில் இருக்கும் புழுக்களை கைகளால் எடுத்து அழித்தல் மற்றும் வேப்பெண்ணெய் தெளிப்பு லிட்டருக்கு 4 மி.லி அல்லது வேப்பங்கொட்டை சாறு 3% என்றளவில் அளிக்க வேண்டும். நச்சு மருந்துகள் தெளிப்பதை தவிர்க்க வேண்டும்.

காய்கறி பயிர்களில் நோய் மற்றும் பூச்சிக்கட்டுப்பாடு மேலாண்மை

குறித்த தகவல்களுக்கு, புஷ்கரம் – வேளாண் அறிவியல் கல்லூரி, புதுக்கோட்டை. 96888 60521 தொலைபேசி என்னை தொடர்பு கொண்டு பயன் பெறலாம்.





கட்டுரையாளர்கள் : **பி.ஜெய் சங்கர், உதவி பேராசிரியர், தோட்டக்கலைத் துறை, மின்னஞ்சல் : sankarjai03 @gmail.com, ஸ்ரீ.தரணி பிரியா, மு.வினோதினி, 2ஆம் ஆண்டு வேளாண் மாணவிகள், புஷ்கரம் – வேளாண் அறிவியல் கல்லூரி, புதுக்கோட்டை.**







Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com